1989 மார்ச் 29]

கடன் உதவி மறுக்கப்பட்டதாக இதுவரை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. அப்படி ஏதாவது மறுக்கப்படுமானால், சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக மீண்டும் பரிந்துரை செய்து அந்தக் கடன் உதவிகளைப் பெறுவதற்கு இந்த அரசு முயற்சி செய்யும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்கள் நிறைவேற, மத்திய மாநில அரசுகள் கடந்த 10 ஆண்டுகளில் வழங்கிய மானியங்கள் எவ்வளவு ? ஏதாவது மானியம் டைவர்ட் செய்யப்பட்டுள்ளதா ? அப்படி செய்யப்பட்டிருந்தால் எத்தனை சதவிகிதம் ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற திட்டங்களுக்கு, மாவட்டத் தொழில் மையங்களுக்கு ஆகும் செலவுத் தொகையை மத்திய மாநில அரசுகள் 50:50 என்கிற விகிதத்தில் அல்லது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 4 லட்சம் ரூபாய், இதில் எது குறைவோ அது மாநில அரசால் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கு ஒவ்வோர் ஆண்டும் ஒதுக்கப்படும் தொகை 1980 ஆம் ஆண்டிலிருந்து, தொடர்ந்து கூடுதலாகிக் கொண்டு வருகிறது. மேலும், இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை எங்கேயும் எதுவும் மாறுதல் செய்யப்படவில்லை. டைவர்ட் செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூல் தட்டுப்பாட்டை நீக்க கூட்டுறவு ஆலைகள்.

12—(*வினா எண். 114) திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நூல் தட்டுப்பாட்டை நீக்க நெசவாளர் சங்கங்களே கூட்டுறவு முறையில் ஆலைகளை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவர் அவர்களே, நூல் தட்டுப்பாட்டை நீக்க நெசவாளர் சங்கங்களே கூட்டுறவு முறையில் ஆலைகளை ஏற்படுத்த அரசிடம் எந்தவிதமான உத்தேசமும் இல்லை.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர் சங்கங்களே கூட்டுறவு ஆலைகளை உண்டாக்குவது என்பது நடைமுறைக்கு வர சாத்தியம் இல்லாத ஓர் ஏற்பாடு. குறைந்தபட்சம், நடுத்தரமான நூற்பாலையை

உருவாக்குவது என்றால் கூட 30 லட்சம், 40 லட்சத்திற்கு மேல், இன்னும் ஒரு கோடி ரூபாய் கூட தேவைப்படும். ஆகவே, இன்றைக்கு இருக்கிற கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து கிடைக் கிற நூலைக் கொண்டு, தமிழ்நாட்டில் இருக்கிற 6 லட்சத் திற்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர்களுக்கு நூலை சப்ளை பண்ண, பொது நலனைக் கருதி, நூலை சேகரித்து வைத்து தேவையைப் பூர்த்தி செய்து கொடுக்க, 'நூல் வங்கி' ஒன் றினை ஏற்படுத்தி தனியார் துறையிலிருந்து குறைந்த விலையில் சப்ளை பண்ண,அரசின் செல்வாக்கைப்பயன்படுத்தி அதைவாங்கி கூட்டுறவு நூலையும், இதையும் சேர்த்து பங்கிட்டுக் கொடுக்கும் வகையில் அரசு ஏதாவது திட்டத்தினை உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கூட்டுறவு நூற்பாலைகள் 18 இருக்கின்றன. இதில் 4 இலட்சத்து 59 ஆயிரம் கதிர்கள் கூட்டுறவு நூற்பாலைகளில் 16 ஆயிரம் பேல் பருத்தி நூல் உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்த நூல் 'கோவாப் டெக்ஸ்' மூலம் நியாயமான விலையில் கூட்டுறவுச் சங்கங் களுக்கு வழங்கப்படுகிறது.

திரு. சே. ஆர். ஜி. தனபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலைகளில் 'சிட்டா' நூல்களை தயாரிப்பதை விட்டுவிட்டு, 'கோன்' நூல்களைத் தயாரித்து வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதால் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நெசவாளர்களுக்கு நூல்கள் கிடைப்ப தில்லை. ஆகவே, நூல் வினியோகம் செய்யும் ஏற்பாட்டுக்கு அரசே வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உற்பத்தியாகின்ற நூல்களைப் போதிய அளவுக்கு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வினியோகம் செய்த பிறகு மீதியுள்ள நூல்கள்தான் வட மாநிலங்களுக்கு விற்பனைக்குப் போகிறது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய நெசவாளர்களுக்கு உதவு கின்ற வகையில் நூல் சப்ளை செய்வதற்காக 'லெவி சுகர்' 'லெவி நெல்' என்று கொள்முதல் செய்து சப்ளை செய்வது போல நூலையும் லெவி முறையில் கொள்முதல் செய்து, குறைந்த விலையில் ஏழையெளிய கைத்தறி நெசவாளர் களுக்கு வழங்க அரசே ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி பரிசீலனை செய்யப் படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1989 மார்ச் 29]

திரு. வி. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நூல் தட்டுப்பாடு காரணமாக நெசவாளர்கள் வேலையின்றி இருக்கிறார்கள். அவர்களுக்குச் சலுகை விலையில், குடும்பக் கார்டு மூலமாக நூல் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவரவர்களே, இதற்குத் தனி வினா எழுப்பினால் விரிவான விடை தர முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

நாடாளுமன்றத்தில் தக்கர் கமிஷன் அறிக்கை வெளியிடப் பெற்றுள்ளது குறித்து.

THIRU M. ABDUL LATHEEF : Mr. Speaker, on a point of order, I crave the indulgence of the Hon. Speaker to raise a matter of public importance, not only public importance, but it is a matter of urgent national importance. I mean, other things being equal, I seriously doubt whether I could raise this at all because of the question of jurisdiction. What I submit is, that the nation is seized of the very serious matter in connection with the publication of the Thakkar Commission Report. . . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் விடை சொல்லும் வரையில் பொறுமையாக இருக்கலாம் அல்லவா ?

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவரவர்களே, மிகமுக்கியமான பகுதி, தக்கர் கமிஷன் ரிப்போர்ட்டிலே. . . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் அனைவரும் உட்காரலாம். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். ஒரு நாளைக்கு ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம்தான் எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது மரபு, இப்போது நான் அறிவிக்கப் போகிற ஒத்திவைப்புத் தீர்மானத்தில் தொடர்ந்து உரையாற்றலாம். (குறுக்கீடு) எந்த வகையான முன்னறிவிப்பும் கொடுக்காமல் எழுப்பக்கூடாது.